உ

ஸ்ரீராமஜெயம்

பண்டரிபுரத்தில் எழுந்தருளிய
ஜெய விடல னென்னும்

ஸ்ரீபாண்டு ரங்கன் மீது கீர்த்தனையும், பதிகமும்.

54

இஃது
அருப்புக்கோட்டை,
கா. வீ. இராமசாமி செட்டியா ரவர்கள் குமாரர்
சங்கீத சாகித்ய வித்வான்
மகா-ள-ள-ஸ்ரீ
கே. வி. ஆர்.
தருமலிங்கஞ் செட்டியார் அவர்களால்
இயற்றியதை

திண்டுக்கல் தாலூகா, சின்னளபட்டி மகா-ள-ள-ஸ்ரீ
சவுடையஞ் செட்டியா ரவர்கள் குமாரர்
மகா-ள-ள-ஸ்ரீ
சவுடையன் செட்டியா ரவர்கள்
வேண்டுகோளின்படி

நூலாசிரியரால்
விருதுபட்டி ஸ்ரீமான்
இராமலிங்கக்குருக்க ளவர்களது
சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது

இதன் விலை) 1919. (அணா 2.

உ

சிவமயம்.

சாத்துக் கவிகள்.

சின்னப் புளியம்பட்டி, மகா-ள-ள-ஸ்ரீ

தி. உ. சுந்தரம் செட்டியார் அவர்கள் இயற்றியது.

வேண்பா.

சீர்மருவு நல்லைத் தருமலிங்கத் தேவலவன்
பார்புகழச் செய்வித்தான் பைந்தமிழ்ப்பா—ஏர்பெருகும்
நங்கைத் திருநாதன் பண்டரிவாழ் செய்யநறும்
பங்கயக் கண்ணன்மேற் பார்.

அருப்புக்கோட்டை, மகா-ள-ள-ஸ்ரீ

ப. திருமேனி செட்டியார் அவர்கள் இயற்றியது.

வேண்பா.

செந்திருவாழ் பண்டரியார் ஸ்ரீபாண்டு ரெங்கன்மேல்
சந்தமொடு கீர்த்தனையைச் சாற்றினான்—அந்தமுறு
நல்லூர்த் தருமலிங்க நாவலவ னவலொடு
எல்லவரும் ஆசைகொள வே.

ஷியூர் மகா-ள-ள-ஸ்ரீ

திரு. சிறைமீட்டியா பிள்ளை அவர்கள் இயற்றியது.

வேண்பா.

மாதண் டுளபமணி மார்பன் திருமாலின்
மீதன் பொடுபா விசைத்தனனே—நீதமிகும்
அன்னத் தடம்பொழில்க ளார்ந்ததிரு நல்லூர்வாழ்
மன்றரும லிங்கவித்து வான்.

சின்னப் புளியம்பட்டி, மகா-ள-ள-ஸ்ரீ

மு. வீரப்ப செட்டியார் அவர்கள் பாடியது.

வேண்பா.

அண்டர்புகழ் பண்டரிவா ழும்பாண்டு ரங்கன்மேல்
தொண்டர்புக ழிப்பதிகம் சொல்லினான்—விண்டு
திருமா துலவுநல்லூர் தேவாங்கர் வம்சத்
தருமலிங்க நாவலவன் றான்.

சாத்துக் கவிகள் முற்றுப் பெற்றன

உ

ஸ்ரீராமஜெயம்.

கணபதி துதி வெண்பா

சீராரும் பண்டரிவாழ் ஸ்ரீபாண்டு ரங்கன்மேல்
பேராரூங் கீர்த்தனையைப் பேசவே—ஏராரும்
பங்கயத்தா தங்குளத்தேன் பாலமர்ந்த தும்பிமுகன்
றுங்கமிகும் பொற்று ணே.

இராகம் - மத்யமாவதி - தாளம் - ரூபகம்:
சுரவந்தித வரகுஞ்சர என்ற மெட்டு.

பல்லவி.

மதகுஞ்சர வதனாங்கர
மகராஜ கணேச சுரனே— (மத)

அனுபல்லவி.

சித்த பங்கய குஞ்சித பத
சிவசங்கரி தந்திடு மணி புவியெங்கணும் வந்தடிபணி (மத)

சரணம்.

மூலா ஒளிர்முன் னூலா கௌரி
பாலா வொலிமிக் கேர் தண்டை
காலா தாதங் குளம் மேவிய
கண்ணே கதிநாடு தவம்புரி பண்ணோ ரடியார்துயர் சங்கரி()

ஈசா பவவி னாசா வலவை
நேசா வடியர் மேல்விசு
வாசா யெளியனை யாள் நய
வாதா குண்டல தரசிந்தூர
நிறதேகனே யெங்கு நிரந்தர (மத)

வேதா மௌன நாதா விரியங்
காதா புவனம் யாவைக்கும்
தாதா துதி தருமலிங்க நற்
றமிழின் றொடை தனையணி சுந்தர
கமலத்திரு மருக ஆரந்தர (மத)

ஸ்ரீ பாண்டு ரங்கன் மீது

வங்கார மார்பிலணி என்ற மேட்டு.

சிங்கார மான்மதி யாரறுகு சேருசடை
மங்காத நீரவ மாருதிரு மேனியுடை
திண்டோள னனசிவ னுருதவு பாலனென— வருநாதா

சங்கூரு மாகமுனி மீதுவிளை சாலிகனல்
தெங்கோடு சூதமகில் வாழைபல வாசினிகள்
சந்தாலில் காறுமலர் மீறுபொழில் சூழுகலே— யுறைவாசா

தங்காழி சூழுலகு ளோர்புகண லூர்தரும
லிங்காச பாசுகவி பாடெனருள் ஈவதொடு
தன்பேதி லாதிரென வேகருணை வாரிதரு— மஹாதேவா

இங்காரு நீயலது வேறுகதி மாவலபை
பங்காகு வாகனகு ஞகரமெஞ் ஞானமணி
இன்றேழை கோரல்நிறை வேறவரு வாயெனது— கணநாதா.

சரஸ்வதி துதி.

இராகம் - நாதநாமக் கிரியை - தாளம் - ஆதி.

பல்லவி.

பாரதி யுந்தன் பதமலர் பணிந்தேன் (பா)

அனுபல்லவி.

பூரணி வாணி புத்தக பாணி
புத்தே ளிடத்தமர் நித்யகல் யாணி (பா)

சரணம்.

கனதன லோலி திவ்ய குணசீலி
கனகனற் றாலி கிருபாலி
அனமுறை சீலி அருந்தமிழ் வேலி
அன்பன் தருமலிங்கன் தமிழ்க்கனு கூலி (பா)

ஏரணி வீணைக் காணி நிதானி
இரவியை நிகர்நவ மணிமுடி பூணி
தாரணி யோர்புகழ் நவளபத் மாசனி
நாளா பரணி சர்வாணி (பா)

ராம பஜனை கோலியா யென்ற மெட்டு. 3

பல்லவி.

பூபதி யெனை யாளையா யிது சமயம் (பூ)

அனுபல்லவி.

தா பா தம்புய தரிசன மெனக்கு நீ
தசரத ராஜ சுதா யிது சமயம் (பூ)

சரணம்.

கோதிலா வயோத்தி ராமா கோக்குல பாந்தாமா
குவலயம் மகிழ் கோமா யிது சமயம் (பூ)
சந்தர கலையின் கர்வம் தனையதம் செய்து காத்த
ஜானகி மகிழ் துரையே யிது சமயம் (பூ)
தர்ம விக்கன் துதி சாமி ஸ்ரீரகுபதி
ஜனகன் மருகா நீ கதி யிது சமயம். (பூ)

மாத்தாட பாராதேனோ என்ற மெட்டு.
இராகம் - கமாசு - தாளம் - ரூபகம்.

பல்லவி.

சித்தா மனோகரனே ஜெ விட்டலனே (சி)

அனுபல்லவி.

தாதா வெனக்கு நீயே தமியேனுக் கருள் வாயே (சி)

சரணம்.

சங்கணிகர துங்கா சாமி கஸ்தூரி ரங்கா
பங்கேருக நயனா பாம்பணை மேல் சயனா (சி)
கஞ்சன் தனக்கோர் காலா கண்ணா வேணுகோ பாலா
பஞ்சவர்க் கனுகூலா பரிமள மிகு மேலா (சி)
நந்த னசோதை மகிழ் நவனிதச் சோரனே
மைந்தன் தருமலிங்கன் வணைதமிழ் தாரனே (சி)

ஸ்ரீ பாண்டுரங்கன் மீது

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் என்ற மெட்டு.

அரங்கமாரும் தளிமிசைமேவிய திருமாலே
அனந்தசயனனே அடிமையின்மிடிதவிர் புவிமேலே
இரங்கவில்லையா உன்மனமென்மீசை மணவாளா
இருண்டகானிடை புகுந்தசேய்நிக ரெனையாளாய்
கரங்களழகுற வளையொடுசக்கர மணிமாயா
கறந்தபால்தயிர் வெண்ணெயிலாசைகொள் பெருமாளே
மரக்களேழையு மோரம்பில்துளை யிடுதீரா
மதம்சிறந்திடு வாலியை வதைசெயும் அதிகாரா
நலங்களேதரு பண்டரிபுரமுறை ரகுநாதா
நடஞ்செய்தாடிட பஜனைகள்பாடிட மகிழ்நீதா
தலங்களெங்குமு ளோர்களெலாமுந் தனைத்தேடி
சகஸ்திரநாமனே நினைமறவாதுன தடிநாடி
கலந்தமலரொடு துளபாபரணமு மேசூடி
கரங்குவித்துனை தெரிசனைசெயவர மருள்தாதா
பலங்கள்சேர்தரு மலிங்கநற்றமி ழணிதேகா
பணிப்பவழயிதழ் லக்குமிமருவிய பெருமாளே.

இராகம் - இந்துஸ்தான் தோடி - தாளம் - ஏகம்.

பல்லவி.

அரிநா ராயண நாமம் சொல்லு
ஆசையைக் கொல்லு (அரி

அநுபல்லவி.

நெறிமிகு பெரியோ ருறவுசெய் தினமே
நித்தமும் பக்தி செய்தால் வருங் கனமே
விரிகடல் சூழ்புவி வாழ்வுசொற் பணமே
வேத முறைக ளறியாக் கெட்ட மனமே (அரி)

சரணம்.

திருமேவயோத்திதனி லன்று கௌசிகன்றன்
அருமை மொழியை நலமென்று தம்பியுடனே
வருமார்க்கம் தாடகையைக் கொன்று கரியகல்லை
உருவாக்கியே மிதிலைசென்று உலகில்யாரும்
ஒப்பே இலாப்பேர் சிறப்பார்

ஜனகனுரை சொல்லை உறுதி கொண்டே
வொப்போ விதப்பா வெனப்பார்ப்
பவர் மயங்கும் வில்லை வளைத்தொடித்து
தப்பா ரிதழ்ப்பூ மாதைப்
பார்புகழ மணந்தெல்லை வலம்புரிந்து
அப்பால் தனுப்போ ருரைப்பேர்ப்
பாசுராமன் வில்லை பறித்த பின்னர்
அன்னை சொல்மன துன்னியே நறை
மன்னு கானிடை தன்னை நாடியே சென்று
மனைவி தம்பி
தன்னுட னனு வின்ன மின்றியே
அன்ன மில்லது கன்னல் காய்கனி தின்று
பஞ்சவடியில்
உன்னலாகிய பர்ன சாலைசெய்
தன்னைஜானகி தன்னைவைத் தன் றன்று
கனிக்கா யிரு
ளென்னுமா பொழில் தன்னி லேகியே
கன்னி சூர்ப்பனி சின்னமேயுற வென்று
கரதூஷணுள்
என்றவர் படைமுழுதும்
கொன்றிட சூர்ப்பனகையும்
சென்றுமே ராவண னிடம்
நின்றுமே மொழிந்திட வப்போதே
மாரீசனுமான்
கன்றுருவ மாகியக்கு
சென்றுமே ஜானகி முனம்
நின்றிடப் பிடித்துத்தாரு
மென்றிடத் துரத்திக் கொன்ற வாதைக்
கபயமிட
இன்றிது மோசமெனவே
நின்றிடும் லக்ஷ்மணர் தனை
சென்றுவா வென அன்னைபு
கன்றிடு மொழியது தப்பாதே
நடக்கக் கண்டு

குன்றெனும் புய ராவணன்
நன்றல்ல செய்தால் வருந்தி
தென்று மனதில் யோசனை
யொன்று நினைக்காமல் சீதை மாதை
தூக்கியே செல்ல

கோத்திர மவர்தீர மிம்
மாத்திரமென் றறியாமல்
சூஸ்திர ரதத்தை விண்ணி
லேற்றியே செல்கிறான்
மாதைக் கொண்டே செல்லச் சடாய்வும்

ஆத்திரத்துட னிவன்றன்
பேர்த்திற மெனக்கிளியெம்
மாத்திர மென மாயனை
தோத்திரஞ் செய்தே
யெதிர்த்து சண்டை செய்யும் போதிலே

மாத்தியே உயிர் தலத்தை
சாற்றி யுத்தஞ் செய்யெனப் பூர்
வோத்திர மறிந்துச் சண
மாத்திரத்தில்
ரெக்கைக ளிரண்டை அறுக்க அன்னை

பார்த்திருக்கிதன் மன்னன்வரும்
மாத்திரம் உயிருக்க
பூர்த்தியாய் வரங்கொடுத்து
போர்த்திய பட்டைக் கிளித்துக் கொண்டே
போகச் சடாய்வால்

பண்டுமொழிக் கொண்டனுமன்
திண்டிறல் சுக்ரீபன் துணை
கொண்டுமே மாமரத்தை யெய்து
வாலியைக் கொன்று

மண்டலஞ்சூழ் கடலினை
உண்டுசெய்து ராவணனோ
டண்டிய படையனைத்துங் கொய்து
விபீடணனிக்

கீர்த்தனையும், பதிகமும்.

கெண்டிசைப் புகழிலங்கை
உண்டெனும் வரைக்கிப்பட்டம்
கொண்டரசியற்றும்படி
மாதை யழைத்து செய்து

அண்டரும் புகழுநவ
கண்டமும் மகிழுமதில்
விண்டளவயோத்திநக
முடிபுனைந்து ருய்து

அந்தரர் முனிவரர் மலர்மழை சிந்த
அரிய தருமலிங்கன் பதஞ்சொலச் சொந்த
மந்திரி மார்தம்பி மாருட னந்த
மருவுநகரில் கரிமிசை வலம் வந்த (அரி)

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஏகம்.

பல்லவி.

வந்தெந்தனை யாளும் மாயனே என்றும்
குந்தி மைந்தர்க்காசை நேயனே
மருமலி துங்கனே
திருமரு வங்கனே (வந்

அநு பல்லவி.

கந்தமுறைமேலா கார்நிறக் கோபாலா
நந்தன்மகிழ்பாலா நண்பர்க்கனு கூலா
நருமணிவண்ணனே
நறைமலர்த் தாளனே
ஜெகமகிழ்க் கண்ணனே
தீனதயாளனே [வந்

1785

சரணம்.

இக்குச் சிலையானை யீன்ற குணவானே
திக்குப்புகழ் கோனே சிராப்பதி யானே
செங்கரமீது வலம்புரி யாகிய
சங்கை யணிந்திடு ரங்கனே யிங்ஙனம் (வந்

பெருமை மிக வேறும் போரர் நலே சாரும்
தருமலிங்கன் கூறும் தமிழுக் கருள் சேரும்
தாடகை வாலி சம்மார வொய்யானே
ஏடவிழ் பூக்குழல் சோதை குமாரனே (வந்

ஸ்ரீ பாண்டு ரங்கன் மீது

ஆயை சையா என்ற மெட்டு.

வாவென் னய்யா — அரங்கமுறை மெய்யா
வந்தாளம் வளைக் கையா — மணி
வண்ணா கஞ்சக் கண்ணா — கோப மெண்ணா
என வறுமை கொய்யிந் — நாளே — உன்
திருமிகும் பொற் — றாளே — மிக
மனதிலனு தினமும் நினை — யெனதுய
வினையொழிவா — (வா)

சால துங்கா — அருள்செய் லக்ஷ்மி — பங்கா
சமயம் பாண்டு — ரங்கா — என்
தாதாம விநோத பிரக்யாத — ஐயா
தஞ்சம் நீயலலாது — இப்
பஞ்சைக்கு வேறேது — கதி
தந்திடுவா யுந்தனது சுந்தரபா தந்தனை — (வா

வேழ மன்றே — மடுவதனில் நின்றே
வேண்ட வாண்டவா — பின்றே — கொடும்
வினையே கெட நினையே துதி யெனையே — அதி
வேகமாய் வந் — தாளே — என்
சோகந்தீ ரிந், — நாளே — இந்த
விரிநிலங்கண் — பெருமை தங்குந்
தரும லிங்கன் — வறுமை கொய்ய [வா

பரதரஹா வென்ற மெட்டு.

பல்லவி.

பருதிகுலா பாண்டவர்க் கொரு தூதா சூதா [பரு

அநுபல்லவி.

அரிபரந் தாமா வென்றே — அன்பர்கள் துதிக்கும்
ஆபத்பாந் தவனென — யாவரு மதிக்கும்
அச்சுதனே — பக்ஷமுடன்
நிச்சயமாய் — ரக்ஷியெனை [பரு

சரணம்.

பத்தியில் மிகுந்த ஜக் — ப்ராயுனை வேண்ட
பண்டரி புரவாச — னென்றுவந் தாண்ட
பத்தவதா ரத்தனே — உன்
சித்த மென்மேல் — வைத்தருள்செய் (பரு

கானக் குறத்திவள்ளி கணவன்றன் மாமா
கருது மடமையின்மே லிவ்வர்ம மாமா
கத்துகடல் சுத்துபுவ
னத்திலுனை யொத்தவர் யார்(பரு

தாணித னெனப்பேர் கொண்ட நன்னீதா
தர்மலிங்கனைப் புரந்தாளும் பிரத் யாதா
தஞ்சமெனும் பஞ்சையுறும்
சஞ்சலந்தீ குஞ்சமயம் [பருதி

நடராஜ என்ற மெட்டு.

இராகம் – நாட்டை – ஆதி – தாளம்.

பல்லவி.

ஜெகநாத ஸ்ரீரகுபதி ஜெகநாத வெழில்
சிர வாரியுறை தீரா பார்முகமேன் (ஜெ

அநுபல்லவி.

புகழ்பெறு வனிதை யசோதையின் புதல்வனே நான்
பூவுலகினிடை பூவையர் மையலில் பூதயெனை விட்டேன்
பூதமது மூலப்பூமனேயெனைக் கைவிடலாமோநற்கருணைசெய்வாய்
போர்விஜயன் உனக்கன்று தேர்நடத்தி ஜெயந்தந்த (ஜெக)

சரணம்.

மாநய குணனே மாவதி கனனே மாபுய திடனே
மாமதனை யருள் வாதலக்ஷ மணரெனடு
பாதசத்துருக்கர் மேல்
வாஞ்சையை வைத்தாண்ட மணி வண்ணனே
கண்ணனே வுயர் [ஜெக

ஆதாவு நீயலா திங்கினி யுளதார்சொல் திருவாளனே வுனையே
அநுதினம் கனவிலும் நனவிலுந் துதி செய்தேன்
ஐயனே யாங்கமுறை மெய்பனே
வந்தா தரிப்பாய் [ஜெக

வா கெருடன் மிசை வா அதிவிரைவில் வா கருணை செய
வா தரும லிங்கன் வறுமை யனைத்தினையும்
பருத்தியின் முன் பனி போல்
வாட்டிய நற்றிருப்பதி மாயனே காயாம்பு வண்ணா [ஜெக

ஸ்ரீ பாண்டுரங்கன் மீது

இராகம் - எதுகுல காம்போதி - திருவிடை - தாளம்.

பல்லவி.

துளப மணிந்த தேகா　　துங்கா ரங்கா மாயோகா
துரிதமாய் வந்தெனை　　நீ கா [துளப

அனுபல்லவி.

வளமே மிகும் பண்டரி　　வாசனே கேசவனே
மாயாவதாரா நீல வண்ணனே　　செங்கண்ணனே [துள]

சரணம்.

துளைத்திகிரி கரத்தனே　　உனையே
துதிக்கு மெனதகத்　　துயர்களை யென்
றழைக்கு மெளியனுக்கு　　வரமரு ளரக்கர்குல
மறக்கணைகள் தொடு　　[துள]

ஜெகத்தினர்கள் மிகத்　　தினமே துதி
திருக்கமலமினைத்　　தழுவு பதி
மகத்துவமே　　மிகுத்த கனநிதி
மலர்ப்பத நீ கொடுக்க　　விது தருதி (துள

நலக்குலவி யிலங்கு　　நலேநகர் தனில்
நலம்பெற நன்　　னிசைத்தமிழ் செய்தரு
மலிங்கனுள　　மகிழ்ந்திடவே வரம
வழங்குதிரு வரங்க　　முறைகமழ் [துள

அச்சா மோரி லாகிரே என்ற மெட்டு.

பல்லவி.

எதுகுலகோ பாலா　　ஏழையெனை யாளுவாய்
எனை யாளுவாய்　　எனை யாளுவாய் [எ]

அனுபல்லவி.

அத்திதுயர் தீர்த்தவனே　　ஐவர்களைக் காத்தவனே
ஆலிலை மேலாரு　　நீலமேக வண்ணனே. [எ

சரணம்.

வெண்ணை யள்ளி யுண்ட வையா　　வேணு தரித்த கையா
வினையேகொய்　　தெனையே யாள்
பனக சயனு　　யிந்நாள் [எ

சங்கரர்க்கு மைத்துனனே　　சாமிவுனை நத்தினனே
சதம் நீயே　　யெனும் நாயேன்
தனக்கா பரந்தா　　மனே. [எ

கீர்த்தனையும் பதிகமும். 11

தர்மலிங்கன் போற்று அங்கா — தாதா ஜெ பாண்டு ரெங்கா
தநீயே — வருவாயே
மதுசூதனே — யிந்நாள் [எ

இராகம் — இந்துஸ்தான் — தோடி — தாளம் — ரூபகம்.

பல்லவி.

தினமும் வேண்டினனே — அதி
திருமிகுமலை — கடல்தனில் மிகு
பெருமையதா — யணைமிசை துயில்
தேவகி மைந்தனே — சுந்தர
பூவை யளந்த — சவுந்தர (தின

அநுபல்லவி.

அலமுறைந்தவன் — தந்தை யானவா
ஐவர்க்கா யன்று — தூது போனவா

சரணம்.

சினமிகும் கஞ்ச — னுயிரைக் காய்ந்தவா
திரௌபதைக் கெஞ்சா — துயிலை யீய்ந்தவா
மணமிலையோ வென — தையனே
வாகுயர் வளையணி — க்கையனே
தினகர குலபரந் — தாமனே
ஸ்ரீ ஹரி சகஸ்ந்த்ர — நாமனே [தி

178560

குஞ்சரந் தன்னை — யாண்ட சிதார
கோமள வல்லி தனக்கு — சகோதரா
கஞ்சமென்றவர்க்கு மென்று — மாதரா
தாமோதரா னந்த — கோவிந்த வைகுந்த
தண்டுளபத் தொடை — சூடி
சர்ப்பம தூர்ந்துநின் — றூடி
தொண்டர்கள் தினந்தினம் — பாடி
துதித்திடுங் கண்ணா னன் — மோடி
துங்கனே வர்மமா — ருக்மணி
பங்கனே தர்மலிங்கன் — பணி
துரையே யிந்தத் தரையோர் புகழ்
இறையே யெந்தன் குறையே தவிர் (தின

ஸ்ரீ பாண்டு ரங்கன் மீது

இராகம் - பியாக் - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

வாரண மன்று வருந்தி யழைத்திட
வந்த பரந் தாமா மணி
வண்ணனை யெந்தனைக் காத்திட யிங்கு
வரத்தொலேயோ ராமா நீயோடி
வரத்தொலேயோ ராமா நீதேடி
வரத்தொலேயோ ராமா (வா)

ஏரணி வார்தன மாது ஜக்யாய துதிக்
கன்று வர வில்லையா இந்த
ஏழை யடியனை யாதரிக்க உனக்
கென்ன இது மலேயா அய்யாவுனக்
கென்ன இது மலேயா சாமி வுனக்
கென்ன இது மலேயா (வா)

பஞ்சவர்க்கா யுற்ற சஞ்சலந் தீர்ந்திட
பாரதப் போர்தனிலே அந்த
பற்குணன் தேர்மிசை சாரதியாய் வந்த
பக்த சிரோன் மணியே யென்னய்யா
பக்த சிரோன் மணியே ராமய்யா
பக்த சிரோன் மணியே (வா)

தர்மலிங்கன் செந்தமிழ் மலர் சூடிய
தண்டுளபத் தாமா முனம்
தாரணி தன்னை யளந்த முகுந்தா
ஜகம்புகழ் ஸ்ரீ ராமா யென்னய்யா
ஜகம்புகழ் ஸ்ரீ ராமா ஓ மெய்யா
ஜகம்புகழ் ஸ்ரீ ராமா (வா)

இராகம் - ஆனந்த பைரவி - தாளம் - ஆதி.

பல்லவி.

கண்ணனைத் தினம் பாடு பர
கதியுறும் வழி தேடு (கண்)

அனுபல்லவி.

மண்ணில் பிறந்து மண்ணாய்ப் போவதுங் கண்டு
மறலிக்குச் சரியொத்த பெண்மையல் கொண்டு
புண்ணவதினாலுனக் கென் பலனுண்டு
பூவிலிருப்ப தெல்லாம் கனவென விண்டு (க)

சரணம்.

விலைபெற்ற ஜோடு சில்பர் பூடசு தரித்தென்ன
விஸ்தாரப் பொட்டிட்டு வீதியில் திரிந்தென்ன
தலைமயிர் தன்னில் கோரா கிராப்புகள் வைத்தென்ன
சல்லா வுடை தரித்து உல்லாசம் செய்தென்ன (க)

சூலம் போட்டுவிட்ட மாடுபோல் பருத்தென்ன
சூதுகொலை செய் தாசி வேசியைச் சார்ந்தென்ன
வேலைத் துரும்பாய்த் திரிந்தலைந்து பொருள் சேர்த்தென்ன
வியர்த்த மல்லால் துணை யாவதொன் றில்லை யின்னுல் (க)

சுந்தர புருஷனென் றெண்ணி நீ திமிர்ந்தென்ன
சுள்ளுடன் கள் மது வுண்டதால் வரவென்ன
தங்கை தாய் மனை மைந்தர் தமர்களால் பயனென்ன
தர்மலிங்கன் றுதிக் கருள்தருந் தாமரை (க)

இராகம் - ஆனந்த பைரவி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

பண்டரி நாதனைக் கண்டு பணியா ஜென்மம்
பாரினி லிருந் தென்னவோ (ப)

அனுபல்லவி.

மண்டலந் தனிலந்த மாயன் திருவடியை
கண்டாரைக் கண்டாலும் கடைத்தேற வழிசெய்யும் (ப)

சரணம்.

சந்தனம் புனுகு சவ்வாதுக ளணிந்தென்ன
சரிகை வஸ்திராபரணம் தன்னைத் தரித்துமென்ன
சுந்தர மாதரைக் கூடிச் சுகித்து மென்ன
துன்பந் தவிர்த்தென் றும் நல் லின்பங் கொடுக்கு மந்த (ப)

மெத்தைமேல் மாடிக ளிருந்தினு லென்ன
வேண்டிய பொருளைச் சம்பாதித்தா லென்ன
சுற்றத்தவர்கள் நம்மைச் சூழ்ந்திருந்தா லென்ன
துரௌபதைக் கன்று மாறுத் துகிலைக் கொடுக்க வந்த (ப)

வம்புசெய் மூடர்கள் வாஞ்சைக ளிருந்தென்ன
வர்ன சுர சங்கீதம் வழுவறக் கற்று மென்ன
தம்பூரு வீணை பிட்டில் வாசித்தா லென்ன
தர்மலிங்கன் செந்தமிழ் தாரணிந்திடு மந்த (ப)

ஸ்ரீரகுபதி யுந்தன் திருமலரடி என்ற மெட்டு.

கண்ணிகள்.

பண்டரி நாதனைக் கண்டு தெரிசித்து நான்
பரகதி யடைவது எப்போ
பாருலகில்ப் பிறந்து மாதரால் யான் கொண்ட
பவத்தை யொழித்திடுவ தெப்போ எப்போ (ப)

புண்டரீக வரதன் பொன்னடி போற்றி
புனிதனாவதினி யெப்போ
பொய்யுடல்தனை மெய்யென் றெண்ணு துனைத் தினம்
புகழ்ந்து மகிழ்ந்திருப்ப தெப்போ எப்போ (ப)

கொண்டல் வண்ண னடியைக் கண்டு பரமானந்த
கூத்தாடுவ தினி யெப்போ
கோளை யுலகினிடை யான்படுந் துயர்தனை
கொய்து கரை யேறுவ தெப்போ யெப்போ (ப)

பண்டு விபீடணனுக் கரசு கொடுத்தவனை
பணிந்தருள் பெறுவது எப்போ
பாண்டு ரங்கனைக் கண்டு பரவச மடைந்திட
பண்டரி புரஞ்செல்வ தெப்போ எப்போ. (ப)

ஜனக ஜனந்தனர் தினந்துதி செய்யுரக
சயனனைக் காண்பது எப்போ
ஜானகி நாதனை தீன தயாளனை
தரிசித்து வாழ்வது எப்போ எப்போ (ப)

வனத்திடை செங்கலில் வந்து நின் றருள் மணி
வண்ணனைக் காண்பது எப்போ
மைந்தன் தருமலிங்கன் தமிழணி கண்ணனை
வணங்கிக் கதிபெறுவ தெப்போ யெப்போ (ப

மற்றுப் பற்றேன என்ற தேவார பண் மெட்டு.

பதிகம்.

அண்டர்தன் துயர்தீர்த்தவா வளை யத்தனே பரிசுத்தனே
மண்டலம் புகழ் புண்டரீக நல் வரதனே மதுசூதனே
கொண்டல்வண்ணனே கஞ்சக்கண்ணனே கோதை சோதைகுமா
பண்டரிபுரத்தன்னில் வாழ்பரந்தாமனே பாண்டு ரங்கனே. [ரனே

அண்டி னோர்க்குறு துன்பம் நீக்கிடும்
அத்தனே ஸ்ரீகோவிந்தனே
வண்டு நேர்குழல் மாது திரௌபதை
வறுமை தீர்த்தவை குந்தனே
சண்டன்வந் தணுகாது காத்தருள்
ஜானகி மண வாளனே
பண்டரிபுரந் தன்னில்வாழ் பரந்தாமனே
பாண்டு ரங்கனே. 2

துண்ட வெண்பிறை நுதல்ஜக்பாய் துயர்
துடைத்தவா வேலை யடைத்தவா
கண்ட தெய்வத்தைப் போற்றிலேன்கரி
வேண்ட ஆண்டவா நீதுணை
உண்டெனும்படி நம்பினேன் என்றும்
உன்னடிக் கெனை யாக்குவாய்
பண்டரிபுரந் தன்னில்வாழ் பரந்தாமனே
பாண்டு ரங்கனே. 3

மண்டுகானிடை செங்கல் மீதமர்
வாசனே பவ நாசனே
தண்டுலாவிய நறைகள் சேர்மலர்த்
தாரனே துளபாரனே
குண்டலியணை யாக்கியே துயில்
கோலனே ஸ்ரீகோபாலனே
பண்டரிபுரந் தன்னில்வாழ் பரந்தாமனே
பாண்டு ரங்கனே. 4

அண்டமெந்தனை யாதரித் தரு
ளய்யனே சீல மெய்யனே
செண்டுபோல் கன்றை வாரியேவிழ
வெறிந்தவா ஜெயவிட்டலனே
பண்டுவெற்பினைக் குடைசெய் தாயரைப்
பாதுகாத்தவி னோதனே
பண்டரிபுரந் தன்னில்வாழ் பரந்தாமனே
பாண்டு ரங்கனே. 5

ஸ்ரீ பாண்டுரங்கன் மீது

தெண்டிரைவளை யுலகெலாந் துதி
சீதரா தேவகி சுதா
கண்டுமென்மொழி ஜானகி மகிழ்
காந்தனே நய சாந்தனே
தொண்டனேன் துயர் தீரய்யா முகம்
பாரய்யா அருள் கூரய்யா
பண்டரிபுரந் தன்னில்வாழ் பரந்தாமனே
பாண்டு ரங்கனே.

எண்டிசைமுதல் விண்டுளோர் தொழும்
ஏகனே லக்மி பாகனே
பண்டைநாள் கபீர் தாசன்பெண்டினை
பாதுகாத்தபூ பாலனே
கண்டியார் விஷ்ணு ஞகியேஏக
நாதனை வந்து காத்தவா
பண்டரிபுரந் தன்னில்வாழ் பரந்தாமனே
பாண்டு ரங்கனே.

பெண்டுபிள்ளைகள் சதமென்றே யிந்தப்
பேதை நெஞ்சகத் தெண்ணியே
உண்டுறங்குவ தன்றியேது நான்
அறிகிலேன் ஒன்றும் தெரிகிலேன்
தொண்டுசெய்துனைப் போற்றினே னருள்
தூயனே யெனு மாயனே
பண்டரிபுரந் தன்னில்வாழ் பரந்தாமனே
பாண்டு ரங்கனே.

கெண்டை நேர்விழி ருக்மணிமகிழ்
கேசவா புவி வாசவா
குண்டலன்சுய சோதரா யெந்தன்
குறைதவிர்த் தருள் சீதரா
விண்டுவேயுனை யன்றி யார்கதி
வேலை சூழ்புவி யோர்புகழ்
பண்டரிபுரந் தன்னில்வாழ் பரந்தாமனே
பாண்டு ரங்கனே.

17

கண்டதா ருந்தன் பெருமையைக்
  கருணாகரா ஞான சாகரா
அண்டகோடி ப்ரமாண்ட நாயக
  ரானவா புவி யாவையும்
உண்டவா கரை கண்டவா யிந்த
  உலகுளோர் தொழ நின்றவா
புண்டரீபுரந் தன்னில்வாழ் பார்தாமனே
  பாண்டு ரங்கனே. 10

பதிகம் முற்றிற்று.

இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

பல்லவி.

ப்ரம தயாள ஓம் பண்டரி புர வரத (ப

அநுபல்லவி.

காதில் வேணு பிடித்தவா
காளிங்கன் மிசை நடித்தவா
காளமேக தேகனே யெனைக் காரும் யோகனே
யூகனே [பர]

சரணம்.

தும்பி வேண்ட ஆண்டவா
துளபத் தாமம் பூண்டவா
சோதை மைந்த னானவா யென்
துயரம் போக்குவாய் நீக்குவாய் [ப]

மண்ணை யுண்ட வாயனே
மாகுஜேலர் நேயனே
மாதவா சீதா சமேதா
வறுமைகொய் நாதா நன்னீதா [ப]

தர்மலிங்கன் தன்னையே
தாங்கும் தேவ நின்னையே
தஞ்ச மென்னும் பஞ்சையென் தன்
சஞ்சலம் தீராய் கண் பாராய் [ப]

ஸ்ரீ பாண்டு ரங்கன் மீது

நீபோ யுரைப்பாய் அனுமானே என்ற வர்ண மெட்டு.
இராகம் - மத்யமாவதி - தாளம் - ஆதி.

பல்லவி.

வா ராமச் சந்திரா வைகுந்தா
ஏனின்னம் வாது [வா

அநுபல்லவி.

பாராமுக மேனின்னம் ரகுபதி [வா]
தாரா யுனதடி மலரிது ததி

சரணம்.

மாதா பிதா குரு நீயாகி ஜீவர்க்குக் கண்ணாய்
மணியா யதற்குள் ளொளி யாகி பூவுலகுளோர்க்
காதார பூதமும் தானாகி விண்முத லந்த
அண்ட பிரமாண்ட கோடி யாகி யெங்கும் நிறைந்த
சீதா ரவிகுல மரபினில் வரு
தாதா கதிதா யிது ததிமது
சூதா அடியவன் மிசை யிது வரை
வாதா ஜெய விட்டலனே ருக்மணி
நாதனே தர்மலிங்கன் ஓதிய தமிழணிந்த
பாதனே மீனும்பிகை சகோதரா யிது சமயம் [வா]

யாகத்து மோகே என்ற இந்துஸ்தானி மெட்டு.

பல்லவி.

ஜானகி பூமா சமயமருள் செய் பரந்தாமா

அநுபல்லவி.

சமயமருள் செய் பரந் தாமா சகஸ்திர நாமா [ஜா]

சரணம்.

சற்குணன் தோழா பரம தயாளா
பங்கயமலர்த் தாளா பச்சம் வைத்தெந்தனை யாளா [ஜா]
நந்த குமாரா நவநீத சோரா
நாரணனே வுனை நம்பு மன்பன் துன்பம் தீராய் [ஜா]
பண்டரி வாசா பாண்டுரெங் கேசா
பக்தன் தருமலிங்கன் பைந்தமி ழுகந்த யீசா [ஜா]

சதுர்ஸ்ர ஜாதி.	திஸ்ர ஜாதி.	மிஸ்ர ஜாதி.	கண்ட ஜாதி.	சங்கீர்ண ஜாதி.
துருவம். 1 லகு 1 துரிதம் 2 லகு. அக்ஷரம் 14.	துருவம். லகு 1. துரிதம் 1. லகு 2. அக்ஷரம் 11.	துருவம். லகு 1. துரிதம் 1. லகு 2. அக்ஷரம் 23.	துருவம். லகு 1. துரிதம் 1. லகு 2. அக்ஷரம் 17	துருவம். லகு 1. துரிதம் 1. லகு 2. அக்ஷரம் 29.
மட்டயம். லகு 1. துரிதம் 1. லகு 1. அக்ஷரம் 10.	மட்டயம். லகு 1. துரிதம் 1. லகு 1. அக்ஷரம் 8.	மட்டயம். லகு 1. துரிதம் 1. லகு 1. அக்ஷரம் 14.	மட்டயம். லகு 1. துரிதம் 1. லகு 1 அக்ஷரம் 12.	மட்டயம். லகு 1. துரிதம் 1. லகு 1. அக்ஷரம் 20.
ரூபகம். லகு 1. துரிதம் 1. அக்ஷரம் 6	ரூபகம். லகு 1. துரிதம் 1. அக்ஷரம் 5.	ரூபகம். லகு 1. துரிதம் 1. அக்ஷரம் 9.	ரூபகம். லகு 1. துரிதம் 1. அக்ஷரம் 7	ரூபகம். லகு 1. துரிதம் 1. அக்ஷரம். 12
ஜம்பை. லகு 1. அனுதுரிதம் 1. துரிதம் 1. அக்ஷரம் 7.	ஜம்பை. லகு 1. அனுதுரிதம் 1. துரிதம் 1. அக்ஷரம் 6	ஜம்பை. லகு 1. அனுதுரிதம் 1. துரிதம் 1. அக்ஷரம் 11	ஜம்பை. லகு 1. அனுதுரிதம் 1. துரிதம் 1. அக்ஷரம் 8.	ஜம்பை. லகு 1. அனுதுரிதம் 1. துரிதம் 1. அக்ஷரம் 12.
திரிபுடை. லகு 1. துரிதம் 2. அக்ஷரம். 8.	திரிபுடை. லகு 1. துரிதம் 2. அக்ஷரம் 7.	திரிபுடை. லகு 1. துரிதம் 2. அக்ஷரம் 10	திரிபுடை. லகு 1. துரிதம் 2. அக்ஷரம் 9	திரிபுடை. லகு 1. துரிதம் 2. அக்ஷரம் 13
அடதாளம். லகு 2. துரிதம் 2. அக்ஷரம் 12	அடதாளம். லகு 2. துரிதம் 2. அக்ஷரம் 10.	அடதாளம் லகு 2. துரிதம் 2. அக்ஷரம் 18.	அடதாளம் லகு 2. துரிதம் 2. அக்ஷரம் 14	அடதாளம். லகு 2. துரிதம் 2. அக்ஷரம் 22.
ஏகம். லகு 1. அட்சரம் 4	ஏகம் லகு 1. அட்சரம் 3	ஏகம் லகு 1. அட்சரம் 7	ஏகம். லகு 1 அட்சரம் 5	ஏகம் லகு 1 அட்சரம் 9

கரத்தை முகும்த்தி அட்சரம் போடுவது லகுவாகும்.

கரத்தை முகும்த்தி மலர்த்துகிறது ஒரு துரிதமாகும்.

கரத்தை இரண்டு தரம் முகும்த்தி ஒரு தரம் மலர்த்தினுல் அனுதுரிதம் ஒன்று துரிதம் ஒன்ருகும்.

இதில் அட்சரம் கணக்குப் பார்க்க வேண்டுமானுல் முகும்த்தி மலர்த்துவது இரண்டு அட்சரம்.

ஒரு தரம் முகும்த்துகிறது ஒரு அட்சரம்.

இந்த விதமாக ஒவ்வொன்றில் கண்டிருக்கும் அட்சரங்களைக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டியது.

பேகியாவாலோ என்ற இந்துஸ்தான் மெட்டு.

ஓலிப் பாலாழி லோலா யின்கு
லீலா கோபாலா நீ வருவா [ஓ

தும்பியின் முறையே கேட்டருள் துரையே
சோதையின் சேயனே மாயனே.

மாதங்கா ரங்கா அன்பர் பங்கா
எனக்கிங் கார்கதி பாண்டு ரங்கா [ஓ

ஐவரைக் காத்தாய் அசுரரைத் தீர்த்தாய்
அந்தரர் முனிவரைக் கண்பார்த்தாய் நீ
அன்றால முண்டோன்றன் பாரி வுமை
யாள் சோதரா ஞான வாரி [ஓ

தர்மலிங்கனை யாள் சாமி யுன்னடிதாள்
தமியேனை யாளாய் மணவாளா
என் தாதா வினோதா ப்ரக்யாதா ஜெ
நாதா யிவ்வாதா ஒருதா [ஓ

தல்லி நின்ன நேர என்ற கிருதி மேட்டு.

இராகம் - பூரி கல்யாணி - தாளம் - சதுர்சிர ஏகம்.

பல்லவி.

சித்தம் வைத்துனது குற்றமற்ற கழல் [தா]

அனுபல்லவி.

சத்திதன் சோதரா பத்தர்கட் காதரா
சாமி வேணு கான லோலா நீல மேலா [சித்

சரணம்.

பாசம் போக்கி யரி தாசனுக்கி யிரு
பாதம் தா இதுவே நல்ல சமயம்
தாசரதே ரகு ராமா கோமா பூமா
தர்மலிங்கன் போற்றுந் தாதா பாந்தாமா
தாடகை வாலி மாரதிட ராவண
ஞேடசு ராதிகெட யேமன் நாடுற
தாக்கி விண்ணோர் துயர் நீக்கி துன்
போக்கிய தாமோதரானந்த [சித்

கீர்த்தனையும், பதிகமும் முற்றிற்று.

மங்களம் சுபமங்களம்.

உ

விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் திண்டுக்கல் தாலூகா, சின்னாளபட்டி மகா-ள-ள-ஸ்ரீ S. சவுடையன் செட்டியா ரவர்களிடத்திலும், அருப்புக்கோட்டை மகா-ள-ள-ஸ்ரீ சங்கீத சாகித்ய வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ கே. வீ. ஆர். தருமலிங்கஞ் செட்டியா ரவர்களிடத்திலும், நேரிலும், வி. பி. மூலமாகவும், பெற்றுக் கொள்ளலாம்.

இதன் விலை அணா 2.

K. V. R. T.

அருப்புக்கோட்டை